# சுங்க அறிவித்தல்

## அரசிறைப் பாதுகாப்புக் கட்டளை - இலக்கம். 02/2019

1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புச் சட்டம்

1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் நிதி அமைச்சருக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பின்பற்றி அவரால் ஆக்கப்பட்ட பின்வரும் கட்டளை பொது மக்கள் அறியவென இத்தால் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்: ஆர்.எச்.எஸ். சமரதுங்க
செயலாளர்
நிதி அமைச்சு

நிதி அமைச்சு,
கொழும்பு – 01.
2019 யூன் மாதம் 11 ஆந் திகதி.

# 1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புச் சட்டம்

## கட்டளை

1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பின்பற்றி, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான் 2019 யூன் மாதம் 12 ஆந் திகதி தொடக்கம் செயல்வலுவுக்கு வருமாறு இதற்கான அட்டவணையின் 3 ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள பொருள் ஒவ்வொன்றின் மீதும் அவ் அட்டவணையின் 5 ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவில் விதிக்கப்பட்டுள்ள பொது வீதத்தில் அல்லது சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 235) அட்டவணை 'அ' இன் ஏற்பாடுகளின் கீழுள்ள முன்னுரிமை வீதமொன்று விதிக்கப்பட்டு செலுத்தப்படக் கூடியதாக இருக்குமிடத்து அவ்வட்டவணையின் 4 ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவில் விதிக்கப்பட்டுள்ள முன்னுரிமை வீதத்தில் இறக்குமதித் தீர்வையைக் கோரி அறவிடுமாறு, சுங்கப் பணிப்பாளர் தலைமை அதிபதியை இக்கட்டளை மூலம் தேவைப்படுத்துகிறேன்.

ஒப்பம்: மங்கள சமரவீர
நிதி அமைச்சர்

நிதி அமைச்சு,
கொழும்பு – 01.
2019 யூன் 11 ஆந் திகதி.

## அட்டவணை

| இ.ப.த. இல. (1) | இ.மு. குறியீடு (2) | | விவரணம் (3) | சுங்கத் தீர்வை | | அளவுக் கூறு (6) |
|---|---|---|---|---|---|---|
| | | | | முன்னுரிமை (4) | பொது (5) | |
| 27.10 | 2710.19.41 | -- -- | 10மி.கி/கி.கி(பீபீஎம்) இற்கு மேற்படாதவாறு கந்தகம் அடங்கிய சுப்பர் டீசல் | | ஒரு லீற்றர் ரூபா 15.00 | கி..கிறாம் |
| | 2710.19.49 | -- -- | பிற | | ஒரு லீற்றர் ரூபா 15.00 | கி..கிறாம் |